திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குட வாசல் தாலுக்கா மருத்துவமனை 1955 ஆம் ஆண்டு திரு. ஏ. கே. சின்னையா அவர்களால் இனாமாகக் கட்டிக் கொடுக்கப் பட்டு அதிலேதான் இன்று வரையில் மருத்துவமனை நடந்து வருகிறது. அது விஸ்தரிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும். ஆகவே, இந்த ஆண்டு அந்த மருத்துவமனையை விஸ்தரிப்ப தோடு, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கான உத்ரவாதத்தை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு குடவாசல் மருத்துவமனையின் மீது உள்ள அக்கறையை நான் நன்கு அறிவேன். எல்லா மருத்துவ மனை களிலிருந்தும் இதுபோன்ற கோரிக்கைகள் வந்திருக்கின்ற கார ணத்தால், நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்போது அரசு எல்லா மருத்துவமனைகளையும் விரிவுபடுத்துகின்ற பணியை மேற் கொள்ளும்.

10—10 மணி

குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

*10623—திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பாச்சலூர், மண்ணவனூர், காமனூர் ஆகிய இடங்களில் நீண்ட காலமாக குடி தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பாச்சலூர், மண்ணவனூர், காமனூர் ஆகிய கிராமங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களாகும்.

(ஆ) பாச்சலூர், மண்ணவனூர் ஆகிய கிராமங்களுக்கு முழு மையான குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற இந்தநிதியாண்டில் (1990–91) சேர்க்கப்பட்டுள்ளது. காமனூர் கிராமத்திற்கு வரும் ஆண்டுகளில் திட்டம் எடுக்கப்பட்டு செயலாக்கப்படும்.